இணைப்பு II

(24 ஆம் பக்கத்தில் 76 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.)

(a) மலேரியா மீண்டும் பரவுதலைத் தடுத்தல்.

ஏற்கனவே செய்து வந்ததுபோல் வீடுகளுக்கு டி.டி.டி. மருந்து தெளித்தல், மலேரியா காய்ச்சல் கண்டவர்களுக்கு அடிப்படைச் சிகிச்சை அளித்தல் முதலான வழக்கமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மலேரியா மிகுதியாகப் பரவத் தொடங்கிய பின்னர் இந்நடவடிக்கைகள் மேலும் தீவிரமாக செயல்படுத்தப்பட்டன.

2. இத்தகைய வழக்கமான நடவடிக்கைகள் கிராமப் பகுதிகளில் மலேரியா ஒழிப்பில் முழு வெற்றி அளிக்காததால், இப்போது நோய் இயல் நிலைமைக் கேற்ப கூடுதலாகக் கீழ்க்கண்ட சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு கின்றன :—

(i) இராமநாதபுரம் கடற்கரைப் பகுதிகள் மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் வாரந்தோறும் 'பாரிஸ்கிரீன்' தூள் தெளித்து கொசுப்புழு உற்பத்தி தடுக்கப்படுகிறது. இப்பகுதியில் மலேரியா பரவுவதை இக்கூடுதல் நடவடிக்கை கணிசமான அளவுக்குக் குறைத்துள்ளது.

(ii) தருமபுரி, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் பெண்ணை யாற்றங்கரையில் 50 மைல் தொலைவுக்கு வாரந்தோறும் 'அரோமெக்ஸ்' மருந்து தெளிக்கப்படுகிறது. மலேரியா பரப்பும் கொசுக்களைப் புழுப் பருவத்திலேயே அழிப்பதற்கான இந்த நடவடிக்கை, வீடுகளில் டி.டி.டி. மருந்து தூவும் வேலைக்குக் கூடுதலாக சமீப காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதன் பலன் கவனமாகக் கண்காணிக்கப்படுகின்றது.

(iii) மிகுதியாக மலேரியா பரவியுள்ள கிராமங்களில் ஒன்று அல்லது மேற்பட்ட முறைகள் பெரிய அளவில் மருந்து விநியோகிப்பதன் மூலம் விரைவில் மலேரியா நோய் குறைய வழி செய்யப்படுகிறது.

3. சமீப காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மேலே கூறிய சிறப்பு நடவடிக்கைகள் எதிர்பார்க்கும் பலனைத் தரும் என்று கருதப்படுகிறது. நிலைமையைச் சமாளிக்க ஏற்கனவே எடுத்துள்ள நடவடிக்கைகள் போது மானவை அல்ல என்று கண்டறிந்தால் மேலும் பிற கூடுதல் முறைகள் பின் பற்றுவது குறித்து யோசிக்கப்படும்.

4. நகரப் பகுதிகளில், வழக்கமான முறைகளான கொசுக்களைப் புழுப் பருவத்திலேயே அழித்தல், ஆங்காங்கு டி.டி.டி. மருந்து தூவுதல், நோயாளிகளுக்கு அடிப்படை சிகிச்சை அளித்தல் ஆகிய வேலைகள் மேலும் தீவிரப் படுத்தப்படும். வறட்சியினுல் மீன் வளர்ப்பு பாதிக்கப்பட்டதனுல் நீர் நிலைகளில் மீன்களை விடுவதற்குப் பதில் 'பாரிஸ் கிரீன்' மருந்திடப்படுகிறது. வீடுவீடாகச் சென்று கொசு உற்பத்தி ஆகத் தக்க இடங்களை ஆய்வு செய்யும் வேலையை மேம்படுத்த, கூடுதலாக ஏவலாட்கள் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

5. ஈரோடு மற்றும் சேலம் நகராட்சிகளில், சமீப காலத்தில் கிணறுகளில் 'பைரத்தரம்' எண்ணெய் இடுகின்ற பணி கூடுதலாக மேற்கொள்ளப்பட்டு மலேரியா பரவும் வீதம் குறைக்கப்பட்டுள்ளது.

6. மேற்குறித்த தீவிர நடவடிக்கைகளினுல் மலேரியா காய்ச்சல் பரவுவது குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொசுத் தொல்லையைக் கட்டுப்படுத்துதல் :

தமிழ்நாட்டில் நகராட்சிகளாலும், பேரூராட்சிகளாலும் சுமார் 175 திட்டங்கள் கொசு உற்பத்தி ஒழிப்புக்கென்று அரசினுல் அனுமதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. இவற்றுக்கு நான்கில் ஒரு பகுதி அல்லது மூன்றில் ஒரு பகுதி மாநில நிதியிலிருந்து மானியமாகக் கிடைத்துள்ளது.

ஆகஸ்ட் 1975 திங்களில் சென்னை நகரத்தில் மலேரியா தடுப்புத் தீவிர இயக்கம் பொதுமக்களுக்கும் பள்ளிகளுக்கும் திரைப்படக் காட்சிகள் மூலமாகவும், கல்வி, ஏனைய நிலையங்களுக்குச் செய்தி விளக்கங்கள் கொண்ட போஸ்டர்களும், அறிக்கைகளும் விநியோகம் மூலமாகவும் நிறைவேற்றப் பட்டது. கொசு உற்பத்தி ஒழிப்பு பற்றிய ஒரு 'ஃப்ளோட்' ( ) தயாரிக்கப்பட்டு, சென்னை நகரத்தில், முக்கியமாக கொசு பரவுவதற்கு ஏதுவாகவுள்ள நகர்ப்புறங்களில் சுற்றிவரவும், கொசு உற்பத்தித் தடுப்புக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றிய செய்தி விளக்கங்கள் விநியோகமும் மேற்கொள்ளப்பட்டன. பத்திரிகைச் செய்தி மூலமாகவும் விளம்பரப்படுத்தப்பட்டது. இந்திய மருத்துவக் கழகம் தங்கள் மருத்துவர்களை அவர்களால் மலேரியா என்று கருதப்பட்டு சிகிச்சை பெற்ற நபர்கள் பற்றிய விவரங்களை அண்மையிலுள்ள நகராட்சி வட்ட அதிகாரியிடம் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. வானொலியும் தொலைகாட்சியும் 24-8-1975 அன்று பயன்படுத்தப்பட்டன. நகரத்திலுள்ள திரைப்பட நிலையங்களில் இந்த நடவடிக்கைகள் பற்றிய ஸ்லைடுகள் ( ) காட்டுவதற்காக

நகராட்சிக்கு கொடுக்கப்பட்டன. செப்டம்பர் திங்கள் இரண்டாம் வாரத்தில் இந்தத் தீவிர இயக்கம் ஈரோடு, கோவை, திருச்சி மற்றும் அவைகளின் சுற்றுப் புறங்களிலும் நிறைவேற்றப்பட்டது.

(j) தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், மலேரியாத் தடுப்பு மருந்து பற்றுக்குறை ஏதும் ஏற்படவில்லை.

இணைப்பு III.

(27-28 ஆம் பக்கங்களில் 77, 78, 79 ஆம் எண்களுள்ள உடுக்குறியிட்ட வினாக்களின் விடையைக் காண்க.)

பருவமழை தவறியதனால், பொதுவாகத் தமிழ்நாட்டிலும், குறிப்பாகச் சென்னை மாநகரிலும் இதன் முன்னர் என்றும் கண்டிராத கடுமையான அளவிற்கு வறட்சி நிலை ஏற்பட்டது. எனவே, இந்நீர்ப் பற்றுக்குறையைப் போக்க புது வழி ஒன்றைக் காணவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. சென்னை மாநகரின் குடிநீர்த் தேக்கமான செங்குன்றம் ஏரியின் நீர்கோள் பகுதிகளிலும், நீலகிரி மாவட்டத்தில் புனல் மின் நிலையம் அமைந்துள்ள பகுதிகளிலும் செயற்கை மழை பெய்விப்பதற்கான திட்டம் ஒன்றை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க, இந்திய அரசின் இசைவு பெற்று, செங்குன்றம் ஏரியின் நீர்கோள் பகுதிகளிலும், நீலகிரி மாவட்டத்தின் புனல் மின் நிலையம் அமைந்திருக்குமிடங்களிலும் மேகங்களில் சில்வர் அயோடைடைத் தூவுவதன் மூலம் செயற்கை மழை பெய்விப்பதற்கான சோதனைகளை மேற்கொள்ள கலிபோர்னியாவைச் சேர்ந்த திருவாளர்கள் அட்மாஸ் பிரிக்ஸ் இன்கார்பொரேட்டுடன் ( ) ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி இந்நிறுவனமே இவ் ஆய்வுக்குத் தேவையான மேகத்தினுள் மருந்தைத் தூவும் பொறிகள் கொண்ட விமானம், ராடார், மேகத்தில் சில்வர் அயோடைடைத் தூவுவதற்கான கருவிகளோடு தொழில் நுட்பப் பணியாளர்களையும் தங்கள் சொந்தப் பொறுப்பிலேயே ஏற்பாடு செய்து செயற்கை மழையைப் பெய்விக்க ஆவன செய்யவேண்டும். மாநில அரசு இத்திட்டத்திற்கான செலவு முழுவதையும் ஏற்றுள்ளது.

2. இந்த ஒப்பந்தத்திற்கிணங்க, செயற்கை மழை பெய்விப்பதற்கான நடவடிக்கைகளைச் செய்யவேண்டிய கால அளவு 15-7-1975 ஆம் நாளிலிருந்து 31-10-1975 ஆம் நாள் வரையிலாகும். இதற்கான நடவடிக்கைகள் 12-7-1975 ஆம் நாளன்றுதான் தொடங்கின. செயற்கை மழை பெய்விப்பதற்கான